# திருக்குறள் என்றைக்குமான இலக்கியம்

**திருக்குறள் பன்னாட்டு மாநாட்டில்**
**வாசிக்கப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு**



**வெளியீடு:**

**மாவட்ட நிர்வாகம், விருதுநகர்**

Scanned with OKEN Scanner

| | | | |
|---|---|---|---|
| 51. | புலவர். இரா.மாரியப்பன் | வாழ்வின் உரைகல் திருக்குறள் | 172 |
| 52. | கொ. மா. கோதண்டம் | உலகச் செம்மொழித் தமிழ் திருவள்ளுவரும் சுந்தரத் தெலுங்கு வேமனாவும் | 176 |
| 53. | முனைவர் மு.பழனியப்பன் | திருக்குறளும் செயற்கை நுண்ணறிவியலும் | 183 |
| 54. | இலக்கிய செல்வி மு.ராஜேஸ்வரி | திருக்குறள் என்றைக்கும் தேவையான இலக்கியம் | 188 |
| 55. | முனைவர். பேரா. க. அழகர் | வள்ளுவர் காட்டும் மானுட மேம்பாட்டுச் சிந்தனைகள் | 194 |
| 56. | திரு.ச.விக்னேஷ் (சீராசைச்சிறுவன்). | திருக்குறளும் திருமந்திரமும் - ஓர் ஆய்வு (திருஞானசம்பந்தர் திருக்கடைக்காப்பில் ஒரு நுனித்த நோக்கு) | 198 |
| 57. | ஜெ.ஜமுனாராணி | குறள் கற்பிக்கும் ‘ஆமை’கள் | 202 |
| 58. | முனைவர்பெ.ஆனந்தி | திருக்குறளில் வினாவிடை உத்தி | 209 |
| 59. | தி. தருண்சர்மா | திருக்குறளில் உயிரினங்கள் | 214 |
| 60. | தை.அந்தோணி ராஜ் | திருக்குறளில் கணிதவியல் சிந்தனைகள் | 218 |
| 61. | முனைவர் வே. அழகுமுத்து | திருக்குறளும் சித்தர் நெறியும் | 223 |
| 62. | முனைவர் ரா.திவ்யா | திருக்குறள் காட்டும் உழவியல் | 228 |
| 63. | முனைவர் ஆ.பூமிச்செல்வம் | தமிழ் நாவல்களில் திருக்குறளின் தாக்கம் | 232 |
| 64. | முனைவர் செ.சாந்தி | பெண்ணிய நோக்கில் களவியல் (தொல்காப்பியம், திருக்குறள் ஒப்பீட்டாய்வு) | 239 |
| 65. | ஆ.முருகேசன் | முப்பாலில் சிரஞ்சீவித்துவம் | 244 |
| 66. | முனைவர் இரா உஷாராணி | திருக்குறளில் உணவும் பழக்க வழக்கக் கோட்பாடுகளும் | 250 |
| 67. | முனைவர் கு. செல்வஈஸ்வரி | வள்ளுவனின் குறளும் விவேகானந்தரின் வித்தும் (வாழ்வியலை முன்வைத்து) | 255 |
| 68. | முனைவர் பெ. ஜெயமாரி | திருக்குறளில் சுற்றுச்சூழல் கருத்துக்கள் | 260 |
| 69. | முனைவர் மு.சங்கர் | திருக்குறள் - பொருட்பாலில் இடைச்சொற்கள் | 264 |
| 70. | முனைவர் வெ.பரிமளம் | வள்ளுவரின் பல்துறைச் சிந்தனைகள் | 270 |
| 71. | பேரா. ச. மைதிலிராஜ் | திருவள்ளுவமாலையில் உவமைக்கூறுகள் | 274 |
| 72. | முனைவர் க.கந்தசாமி பாண்டியன் | மு.ரா.அருணாசலக் கவிராயரும் திருக்குறளும் | 279 |
| 73. | க.வாணி தேவி | திருக்குறள் காட்டும் உடலோம்பல் | 282 |
| 74. | முனைவர் தே. இராணி எலிசபெத் | திருக்குறளில் நிர்வாக மேலாண்மை | 285 |


Scanned with OKEN Scanner

# 70. வள்ளுவரின் பல்துறைச் சிந்தனைகள்

முனைவர் வெ.பரிமளம்
உதவிப்பேராசிரியர், தமிழ்இலக்கியத்துறை
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி
6238535465
gvelu506@gmail.com

"அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி
குறுகத் தெறிந்த குறள்"

என ஔவையாரால் போற்றப்படும் திருக்குறள்தன்னகத்தே பல்வேறு செய்திகளைக் கொண்டுள்ளது. திருக்குறளில் இல்லாத செய்திகளே இல்லை என்று கூறும் அளவிற்கு சிறந்த நூலாகத் திகழ்கிறது. திருவள்ளுவர் தன்னுடைய அறிவை எக்குறளிலும் வலியப் புகுத்தவில்லை. ஆனால் அதை ஆங்காங்கே சுட்டிச் சென்றுள்ளார். மருத்துவம், இயந்திரவியல், வானியல், உயிரியல், கணக்கியல் உள்ளிட்ட பல்வேறு செய்திகளை திருக்குறள் விளக்குகிறது. திருக்குறளில் கூறப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் எக்காலத்திற்கும் பொருந்தமானதாகும். ஆகையால் இது எக்காலத்திற்கும் தேவையான இலக்கியமாக அமைகிறது.

**அறிவியல்**

அறிவியல் என்பது அறிந்து கொள்ளுதல் எனப் பொருள் தரும். அறிவியல் என்பது அறிவின் அடிப்படையில் ஆராய்ந்து உண்மைகளை கண்டுபிடிக்கும் ஒரு துறையாகும். வாழ்வின் இயக்கத்திற்கு துணை நிற்பது அறிவியலாகும் . இது இன்று பல துறைகளை உள்ளடக்கிய மிகப் பெரிய துறையாக உருவாகி வளர்ச்சியடைந்துள்ளது. இத்தகைய அறிவியல் துறைகளின் கருத்துக்கள் திருக்குறளில் காணக்கிடைக்கின்றது.

உலகில் உள்ள அனைத்து பொருட்களும் அணுக்களால் ஆனது என்பது அறிவியல். நிலம், நீர், நெருப்பு, ஆகாயம், காற்று ஆகிய அனைத்தும் அணுக்களின் சேர்க்கையால் உருவானது. இதைத் திருவள்ளுவர்,

"சுவை ஒளி ஓசை ஊறு நாற்றம் என்ற ஐந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு" (27)

**வானியல் செய்திகள்**

தமிழர்கள் பழங்காலம் தொட்டே வானியல் அறிவைக் கொண்டிருந்தனர். வானியலறிஞர்கள் ஆராய்ச்சி செய்த கண்டுபிடித்த உண்மைகளைத் தமிழர்கள் தங்கள் நூல்களில் பதிவு செய்துள்ளனர். வானம் என்பது எல்லையற்றுப் பரவியுள்ளது. எண்ணற்ற விண்மீன்கள், உடுக்கள், கோள்கள், பரவிச் சதறி இயங்கும் வெட்டவெளி கொண்டது. அவற்றில் ஒரு கோளாக பூமி இருக்கிறது. பூமிக்கு பல பெயர்கள் உண்டு. அவற்றில் ஞாலம் என்பதும் ஒன்றாகும். வானத்தில் ஞாயிற்றைச் சுற்றிச் சூழன்றவாறே உலவுகின்ற காரணத்தினால் உலகம் எனக் காரணப் பெயர் பெற்றது. ஞால் என்பதற்கு தொங்கு என்பது பொருளாகும். தொங்கும்

உருண்டை என்னும் உள்ளீட்டு பொருளுடன் ஞாலம் என்ற சொல் திருவள்ளுவரால் பயன்படுத்தப்படுகிறது.

"அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லன் மாஞாலங் கரி" (245)

என்பதில் ஞாலம் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. தொங்குகின்ற தன்மையுடையதே உலகம் கருத்தாற்றல் கலீலியோவிற்கு முன்னர் திருவள்ளுவரால் அறியப்பட்டுள்ளது.

**மருத்துவம்**

மருத்துவமும் ஒரு அறிவியல் ஆகும். இக்கால மருத்துவ அறிவியல் வேகமாக வளர்ந்து கொண்டுள்ளது. நோயைக் கண்டுபிடிக்கும் முறைகள், மருத்துவம், நோய் தீர்க்கும் முறைகள், மருந்துகள் போன்றவை மனிதனின் வாழ்நாட்களை அதிகரித்து வருகின்றது. இக்காலகட்டத்தைப் போன்ற மருந்தவ முறைகள் இல்லாவிடினும் நோய்கள், மருந்துகள் பற்றிய கருத்தாக்கங்கள் திருக்குறளில் காணக்கிடைக்கின்றது.

நோயின் காரணங்களை அறிந்து கொள்ளுதல், நோயினால் ஏற்படும் பாதிப்புகள், அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் போன்றவை மருந்து என்னும் அதிகாரத்தில் காணப்படுகிறது.

"மிகுனும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று" (941)

என்னும் குறள் நோய் பிறப்பதற்கான காரணத்தைக் கூறுகிறது. இன்று நோயைக் கண்டுபிடிக்க எக்ஸ்ரே,ஸ்கேன் போன்ற கருவிகள் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அக்காலத்தில் நாடி பிடித்து இன்ன நோய் என்று நோயைக் கண்டுபிடித்தனர்.

நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
"வாய்நாடி வாய்ப்பச் சொல்" (948)

என்னும் குறள் நோயைக் கண்டுபிடிக்கும் முறையைப் பற்றிக் கூறுகிறது.

**நாட்டின் பொருள்**

ஒரு நாடு பொருளின் செலவாணிக்கேற்ற இருப்பை பெற்றிருக்க வேண்டும். நாட்டின் இலக்கணம் கூறும் திருவள்ளுவர்

"பெரும்பொருளால் பெட்டகத்து ஆகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு" (732)

என்று கூறி நாட்டிற்கு பெரும் பொருள் வேண்டும் என்கிறார். பெரும் பொருள் என்பது அனைவருக்கும் தேவையான பொருளாகும்.

**உழவு**

உழவு என்பது உணவு வழங்கக்கூடிய தொழிலாகும். அதன் சிறப்பு கருதிய வள்ளுவர் உழவிற்கு என்று ஒரு தனி அதிகாரத்தை எழுதியுள்ளார்.

"ஏரினும் நன்றால் எருவிடுதல், கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு" (1038).

என்று உழவு செய்தல் மற்றும் எருவிடுதல் பற்றி விளக்குகிறது. மண்ணை நன்றாக உழுது மண்கட்டிகளைப் புரட்டி விட வேண்டும். கட்டிகளை உடைத்துத் தூளாக்க வேண்டும். அவ்வாறு தூளாக்கப்பட்டபுழுதியை நன்கு சூரியனின் வெப்பக் கதிரில் காயவைக்க வேண்டும்.

"தொடிப் புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்" (1037)

என்னும் கருத்து இன்றைய வேளாண்மைக்கும் பொருந்துகின்ற ஒன்றாகும்.

**மழை**

நீர் நிலைகளில் உள்ள நீர் வெப்பத்தின் காரணமாக ஆவியாகி காற்றில் கலந்து மேகமாக உருவாகிப் பின்னர் மழையாக மாறுகிறது.அவ்வாறு பெய்யும் மழையானது மீண்டும் கடலில் கலந்து முகிலாக மாறுகிறது. இந்த நீர் சூழற்சியானது இக்காலத்திலும் தொடர்ந்து நடந்து வருகிறது. மழையின் சிறப்பு வான்சிறப்பு அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. மழை இல்லையென்றால் உணவு கிடைக்காது, கோயில் பூசைகள் உள்ளிட்டவைகளும், தானம், தர்மம் உள்ளிட்டவைகளும் நடக்காது. இதை,

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின் " (17) என்கிறார்.

**ஆண் – பெண் சமத்துவம்**

ஆண் பெண் சமத்துவம் என்பது வள்ளுவரின் கொள்கையாகும். பெண்களின் உரிமைக்காகவும் உலகியல் மாற்றத்திற்காகவும் பாடுபட்டுள்ளார். பெண் ஆணுக்கு இணையானவள் என்பதை

"சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்
நிறைகக்கும் காப்பே தலை" (57) என்கிறார்.

இதையே பாரதி "வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்" என்னும் அடிகளால் விளக்குகிறார்.

**ஈதலறம்**

ஈகைக்குணம் தான் மனிதனை மனிதனாக்கும். ஈகைக்குணமே உயிரின் ஊதியம் என்பார் வள்ளுவர். இதை ,

"ஈதல் இசைப்பட வாழ்தல் அதுவல்ல
ஊதியம் இல்லை உயிர்க்கு" (231) என்கிறார்.

மேலும் ஈதலறமே பயனுடைய வாழ்க்கையைக் கொடுக்கும் என்பதை உணர்த்துகிறது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்ட குறள் மனிதன் மனிதனாக வாழ உதவுகிறது. அக்காலத்தில் கூறப்பட்ட பெரும்பாலான கருத்துக்கள் இன்றும் நிலைத்து நிற்கின்றன. வள்ளுவரின் பல்துறை சிந்தனைகள் எல்லா காலத்திற்கும் பொதுவானது என்பதையும் திருக்குறள் எல்லா காலத்திற்குமான இலக்கியம் என்பதையும் அறியமுடிகிறது.



Scanned with OKEN Scanner

**துணைநூற்பட்டியல**

1.திருவள்ளுவர்,திருக்குறள் தெளிவுரை,தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 16 ஆவது பதிப்பு, 2002

2. பாரதியார், பாரதியார் கவிதைகள், வானதி பதிப்பகம், சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1883, ப. 39.

3. மதுரைத் தமிழ் நாகனார், திருவள்ளுவ மாலை, திருக்குறள் – பரிமேலழகர் உரை, கழக வெளியீடு, சென்னை, 1964, ப. 408.

நல்ல முத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி நல்கிய seed money
நிதி நல்கையில் எழுதப்பட்ட கட்டுரை